# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/4 - 2018 අප්‍රේල් මස 02 වැනි සඳුදා - 2018.04.02

*2065/4 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தப்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

குறிப்பு இல.: පා/ඉ/2/අත් /I - IV.
காணி அமைச்சின் இல.: 1999/UDA/443.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தப்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

*2001 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதியிட்ட 1248/18 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2004.08.02 ஆந் திகதிய 1352/12 ஆம் இலக்க வர்த்தமானியில் பிழை திருத்தப் பத்திரத்தில் கொ. 8526 எனக் காட்டப்பட்ட வரைபடத்தில் 1 - 16 வரையிலான காணித் துண்டுகளில் ஒன்றான, கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:*

*1.* ***துண்டு இல. 04***

காணியின் பெயர்: கனேவில கும்புர; விபரம்: வயல் நிலம்; உரிமை கோருவோர்: ஏ. எம். லென்ஸிநோனா; விஸ்தீரணம்: *0.0160 ஹெக்டயார்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு பாதுக்க பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. பீ. விக்கிரமசிங்க,
பிரதேச செயலாளர் (பதில்),
பாதுக்க.

பிரதேச செயலகம்,
பாதுக்க,
*2018, மாச்சு 28.*

*04 - 575*




*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மொ/ஆ சங்/03/அத்.
காணி அமைச்சின் இல.: 4/3/8/2015/பீ சி/87.

மொனராகலை மஹானாம கனிஷ்ட பாடசாலைக்கு அவசியமான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

ஊவா மாகாணத்தின், மொனராகலை மாவட்டத்தில், மொனராகலை பிரதேச செயலகப்பிரிவில், முப்பனே கிராமத்தில் அமைந்துள்ள மொனராகலை நில அளவையாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இ. கி. த இல.172, மேலதிக இல. 393, பத்திர இல. 434 இல் காட்டப்பட்டுள்ள காணிகள்:

1. **துண்டு இல. 3449**

காணியின் பெயர்: பல்லேஅராவேவத்த அல்லது ஹெல ஹோனேவெட்டவத்த; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: விஜேவீர குணவர்தன மஹவிதானேலாகே எல்பட் சில்வா, விஜேவீர குணவர்தன மஹவிதானேலாகே கேபிரியெல், விஜேவீர குணவர்தன மஹவிதானேலாகே எலன் நோனா, விஜேவீர குணவர்தன மஹவிதானேலாகே சொபி நோனா; விஸ்தீரணம்: 0.3661 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு மொனராகலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. யு. கே. அல்கெவத்தகே,
பிரதேச செயலாளர்,
மொனராகலை.

பிரதேச செயலகம்,
மொனராகலை,
2018, மாச்சு 23.

04 - 576

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: கெ.பி.செ/எடு 3/1/58.

பொது மக்களின் பணி ஒன்றிற்காக தேவையான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

காணி தேவைப்படும் பொதுத் தேவை:

கெஸ்பேவ பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக காணியை எடுத்தல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்ட, கெஸ்பேவை பிரதேச செயலகப் பிரிவில், 576, தும்போவில மேற்கு கிராம அலுவலர் பிரிவின் தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள 521202 ஆம் இலக்க கடத்திரல் வரைபடம், 18 ஆம் இலக்க வலயத்தின் 10 ஆம் வலய 1 ஆம் இலக்க பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு இலக்கம் 160.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி மு.ப 9.30 மணிக்கு கெஸ்பேவை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வை. கே. எச். ஜீவமாலா,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ,
2018, மாச்சு 27.

04 - 577

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.